செ.வெ. எண்: 39 நாள்: 14.01.2012

செய்தி வெளியீடு

## பொங்கல் திருநாளையொட்டி காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை ஆகியவற்றில் சிறப்பாகப் பணிபுரிந்த 1686 பேருக்கு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கப்படும் முதலமைச்சர் ஆணை

2012 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி, தமிழகக் காவல் துறையில் பணியாற்றும் காவலர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் அதற்குச் சமமான பதவியில் உள்ளவர்கள் என மொத்தம் 1500 பேருக்கு 'தமிழக முதலமைச்சரின் காவலர் பதக்கம்' வழங்கப்படும் என்றும், இப்பதக்கம் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் 2012 பிப்ரவரி முதல் மாதாந்திரப்படியாக 100 ரூபாய் வீதம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இதேபோல தமிழ் நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் முன்னணி தீயணைப்போர், ஓட்டுநர் கம்மியர், ஓட்டுநர் தீயணைப்போர், தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர், தீயணைப்போர் மற்றும் அதற்கு சமமான பதவியில் உள்ளோர் என 120 பேருக்கு முதலமைச்சரின் தீயணைப்புத் துறைப் பதக்கம் வழங்கப்படும் என்றும், இப்பதக்கம் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் 2012 பிப்ரவரி முதல் மாதாந்திரப்படியாக 100 ரூபாய் வீதம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

தமிழகச் சிறைத் துறையில் பணிபுரியும் முதல்நிலை மற்றும் தரம் உயர்த்தப்பட்ட முதல்நிலை வார்டர்கள் 60 பேருக்குத் 'தமிழக முதலமைச்சரின் சிறைத் துறைச் சிறப்புப் பணிப்பதக்கம்' வழங்கப்படும் என்றும், இப்பதக்கம் பெறும் ஒவ்வொருவருக்கும் 2012 பிப்ரவரி முதல் அவரவர் பதவிகளுக்கேற்ப மாதாந்திரப் படியாக 40 ரூபாய் மற்றும் 50 ரூபாய் வீதம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் மாவட்டத் தலைநகரங்களில் பின்னர் நடைபெறவுள்ள அரசு விழாக்களில் பதக்கங்கள் வழங்கப்படும்.

இவைமட்டுமல்லாமல், காவல் தொழில் நுட்பப் பிரிவு, காவல் படப் பிடிப்பாளர்கள் மற்றும் நாய் படைப் பிரிவு ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் தலா இருவர் வீதம் தேர்வு செய்யப்பட்டுள்ள 6 பேருக்குத் தமிழக 'முதலமைச்சரின் காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம்' வழங்கப்படும் என்றும், இப்பதக்கம் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் அவர்தம் பதவிகளுக்கேற்ப 3 ஆயிரம் ரூபாய் மற்றும் 2 ஆயிரம் ரூபாய் ஒரு முறை மட்டும் ரொக்க விருதுத் தொகையாக அளிக்கப்படும் என்றும் இப்பதக்கங்கள் பின்னர் நடைபெறும் விழாவில் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

அரசு முதன்மைச் செயலர், உள்/ம.ஈ.ஆ. துறை,

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**